செய்தி இதழாகப் பதிவு பெற்றது

# தந்தி

இல: 1113 | 1970 ஆகஸ்ட் 20 வியாழக் கிழமை | விலை சதம் 5

University of Jaffna Sri Lanka
RECEIVED
Periodicals Division
Library

## கத்திக்குத்து! ரூபா 5000 அபேஸ்!!

# புறக்கோட்டையில் ஒரு கொள்ளை நாடகம்

### சந்தேக நபர் பொலீஸிடம் சிக்கியதால் டூப் அம்பலம்

**புறக்கோட்டையில் உள்ள ஜன நடமாட்டம் உள்ள பகுதியில் வைத்து பயங்கரக் கொள்ளை அடித்தல் சம்பவம் ஒன்று நடைபெற்றது. வர்த்தகர் ஒருவர் இடது தோளில் கத்தியால் குத்தப்பட்டார். 5000 ரூபா இருந்ததாகக் கூறப்படும் அவரின் பணப் பை அபேஸ் செய்யப்பட்டது.**

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம், பட்டப் பகலில் புதிய சோனகத் தெருவுக்கு அருகில் இடம் பெற்றது.

பணப்பையை பறி கொடுத்த தாகச் சொல்லப்பட்டவர் புறக் கோட்டைப் பொலீஸில் முறைப் பாடு செய்தார்.

பொலீஸார் சும்மா விடுவார் களா? துரித நடவடிக்கை எடுத்த னர். இதன் பலனாக எட்டியாந் தோட்டையைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டார். இவர் கைது செய்யப்பட்ட பின்னர் பொலீஸார் மற்றொருவரையும் மடக்கினர்.

இரண்டாவது சந்தேக நப ரைப் பொலீஸார் கைது செய்த போது கொள்ளைச் சம்பவம் ஒரு "டூப்" நாடகம் என்று தெரிய வந்தது.

கடன்காரர்களிடமிருந்து தப்பு வதற்காக "முறைப்பாட்டுக் காரர்" அந்த டூப் நாடகத்தை நடத்தியதாக இரண்டாவது சந் தேக நபர் பொலீஸில் கூறினர்.

இரண்டாவது சந்தேக நபரின் வாக்குமூலத்தின் படி முறைப்பாட் டுக் காரர் ஒரு பெரும் கடனாளி.

"தினமும் கடன்காரர் அவருக் குப் பெரும் தொல்லை கொடுத்து வந்தனர். கடன்காரர்களிடம் இருந்து தப்புவதற்காக ஒரு டூப் நாடகத்தை நடத்த அவர் திட்ட மிட்டார்.

"இரண்டாவது சந்தேக நப ரான தனது நண்பரின் உதவியை அவர் நாடினர். கொள்ளை நாட கம் ஒன்றை நடத்துவதன் மூலம் கடன்காரர்களின் தொல்லையில் இருந்து விடுபடலாம் என்று இவ ரின் நம்பிக்கை.

ஆனல் இந்த நாடகத்துக்கு உடந்தையாக இருந்த இரண்டா வது சந்தேக நபர் பொலீஸில் சிக்கியபடியால் உண்மை வெளி யாயிற்று.

முறைப்பாட்டுக்காரரும் பின் னர் உண்மையை அவிழ்த்து விட் டார்.

இதற்கு மேலும் பொலீஸார் சும்மா விடுவார்களா? பொய் யான முறைப்பாடு செய்ததாக முறைப்பாட்டுகாரர் மீது வழக் குத் தொடர உள்ளனர். (5)

## மீனாட்சி



என்னுங்க, நூற்றி ஒன்று, பதினெட்டைக் கைப்பிடித்ததாமே!

ஆமாங்க, கிழவனுக் குக் கைநடுக்கம் இல்லைப் போலும்!

## இடமாற்றம்

பொலீஸ் தலைமை அலுவலகத் தின் நிர்வாக அதிகாரியான திரு. கே. விஸ்வலிங்கம் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சினுல் இட மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கிருஷிகச் சேவை உதவிக் கமி ஷனர் திரு. எச். எல். பி. பெரேரா அவரின் இடத்தில் நியமிக்கப்பட் டுள்ளார். (5)

## நடிகை சாசா கபோரின் வைர நகைகள் அபேஸ்!

நியூயோர்க், ஆக. 19

பிரபல ஹொலிவூட் நடிகை சாசா கபோரிடம் இருந்து 7,00,000 டாலர் பெறுமதியான வைர நகைகளை ஆயுதம் தாங்கிய இருவர் நேற்று அபகரித்துச் சென்றனர்.

செல்வி கபோர் "லிப்ட்"டில் சென்று கொண்டிருந்த போது இந்த பயங்கரக் கொள்ளை நடைபெற்றது.

நடிகையுடன் "லிப்ட்"டில் சென்று கொண்டிருந்த இருவர் அந்தக் கொள்ளையை நடத்தினர். நடிகை கபோர் "லிப்ட்"டில் தனது அறைக்குச் சென்று கொண்டிருந்தார். அவர் அணிந்திருந்த இரு வைர மோதிரங்கள், ஒரு செட் வைர காதணிகள் ஆகியவையே கொள்ளையடிக்குப்பட்டன.

கொள்ளை அடிக்குப்பட்ட மோதிரங்களில் ஒன்றின் பெறுமதி மாத்திரம் 5,00,000 டாலர்கள் என்று பொலீ ஸார் தெரிவித்தனர். (5)



பார்ப்போரை மதிமயக் கும் இந்த மாடல் அழகி இத்தாலிய நாட்டைச் சேர்ந்தவர்.

## கோர்ட்டில் சத்தமிட்டவர் ஆறு மாதச் சிறை பெற்றார்

கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்துக்குள் குடிவெறியில் சத்தமிட்டதாகக் கூறப்படும் ஒரு வருக்கு கொழும்பு மேலதிக நீதி பதி திரு. நந்தா விஜேசேகரா ஆறுமாத சாதாரண சிறைத் தண்டனை விதித்தார்.

பி. எச். பெரோலிஸ் என்ற அந்த சந்தேக நபர் புறக்கோட் டையைச் சேர்ந்தவர்.

நீதிமன்ற அறைக்குள் உள்ள வாங்கில் படுத்திருந்து அவர் சத் தமிட்ட போது, அவரைப் பிடித்து விளக்க மறியலில் வைக் கும்படி நீதிபதி, நீதிமன்ற சார் ஜண்டுக்கு உத்தரவிட்டார்.

சந்தேக நபர் அளவுக்கு மிஞ்சி மது அருந்தி நடக்க முடியாத நிலையில் இருந்தபடியால், நீதிமன் றத்திலிருந்து சார்ஜண்டால் வெளியே தூக்கிச் செல்லப்பட் டார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவியை அறையில் வைத்துப் பூட்டிவிட்டு "உண்மை ஒளி" காண வெளியே போவாராம்

## தாபரிப்பு வழக்கில் வாதி தரப்பில் உரை

"எதிர் மனுதார் மனுதாரை மணம் முடித்த போது அவரிடம் ஒரு காரும், ஒரு லொறியும் மற்றும் வங்கியில் 17,000 ரூபா பணமும் இருந்தது. தற்போது அவர் மனுதாரைக் கைவிட்டு விட்டார். அத்துடன் இரவு நேரங்களில் மனுதாரை அறையில் பூட்டி வைத்து விட்டு வெளியேறும் வழக்கம் எதிர் மனுதாருக்கு உண்டு. காலையில் எழுந்து மனுதார், எங்கு சென்றீர்கள் எனக் கேட்டால், "உண்மை ஒளி"யைக் காணச் சென்றேன்" எனப் பதிலளிப்பாராம்."

கம்பஹா மேலதிக நீதவான் திரு. ஜே. ஏ. சி அகஸ்தீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட தாபரிப்பு வழக்கொன்றின் போது மனுதார் தரப்பு வழக்குறிஞர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வீவல்தெனியா என்ற இடத்தைச் சேர்ந்த டபிள்யூ. எம். டீ. தயசிலி என்ற பெண் அதே இடத்தைச் சேர்ந்த தமது கணவரான எஸ். மார்ட்டின் என்பவர் தன்னுடன் இருக்கும் தனது குழந்தைக்கு தாபரிப்பு பணமாக செலுத்தி வரும் 20 ரூபா போதாதெனக் கோரியே இவ் வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

மனுதாரின் வழக்கறிஞர்:- "குழந்தையின் பராமரிப்புக்கென நீதிமன்ற உத்தரவுப்படி மனுதாரால் மாதாந்தம் 20 ரூபா செலுத்தப்பட்டு வருகிறது. இச் சிறிய தொகையை வைத்துக் கொண்டு குழந்தையின் செலவுகளை சமாளிக்க முடியாது. எனது கட்சிக்காரர் கஷ்டப்படுகிறார்."

எதிர் மனுதாரின் வழக்கறிஞர்:- "எனது கட்சிக்காரர் குழந்தையையும் தாயையும் பொறுப்பேற்றுக் கவனிப்பதற்கு தயாராக உள்ளார்."

மனுதாரின் வழக்கறிஞர்:- "எதிர் மனுதார் தனது மனைவியை கண்டபடி தூற்றுவார். அத்துடன் மனைவி நிறைமாதக் கர்ப்பிணியாக இருந்த போதும் அவரைத் தாக்கியுள்ளார். ஆகவே அவருக்கு எதிர் மனுதாருடன் சென்று வாழ்க்கை நடாத்த மனமில்லை. எனவே, பிள்ளையின் பராமரிப்புச் செலவிற்காக மேலும் 10 ரூபா கூடுதலாகச் செலுத்தும்படி கேட்டுக் கொள்கிறேன்."

எதிர் மனுதாரின் வழக்கறிஞர்:- "எனது கட்சிக்காரர் தனது பிள்ளையை மாதம் இரு முறை கிராம சேவையாளரின் காரியாலயத்தில் சந்திக்க விரும்புகிறார்."

மனுதாரின் வழக்கறிஞர்:- "முடியாது. மாவட்ட நீதிமன்றத்தில் இதற்கு உத்தரவு பெற்றால் ஒழிய அது முடியாது."

எதிர் மனுதாரின் வழக்கறிஞர்:- "தாபரிப்புப் பணம் கட்டும் இவருக்கு குழந்தையைப் பார்ப்பதற்கு உரிமை கட்டாயம் இருக்க வேண்டும்."

மனுதாரின் வழக்கறிஞர்:- "திருமணம் செய்த போது இருந்த காரும், லொறியும், வங்கிப் பணம் 17,000 ரூபாவும் அவரிடம் இருக்கிறது."

எதிர் மனுதாரின் வழக்கறிஞர்:- "ஆம். அது எனது கட்சிக்காரரின் பணம்."

மனுதாரின் வழக்கறிஞர்:- "அந்தப் பணம் அத்தனையும் மனைவி, குழந்தைகளின் தேவைகளுக்குச் செலவு செய்யப்பட வேண்டியவை. ஆனால் இவர் தனது மனைவிக்கு இதுவரை காலம் ஒரு அங்குல துணி தானும் வாங்கிக் கொடுத்தது கிடையாது. அத்துடன் இரவு வேளைகளில் மனைவியைப் பூட்டி வைத்து விட்டு வெளியே சென்று விடுவார். அவர் "உண்மை ஒளி"யைக் காண வெளியில் செல்கிறார் போல் தெரிகிறது."

நீதவான்:- "எல்லாம் சரி. நான் அவரிடம் இருந்து தாபரிப்புப் பணமாக 30 ரூபா பெற்றுத் தருகிறேன்."

பின்னர் நீதவான் குழந்தையின் தாபரிப்புப் பணமாக மாதாந்தம் 30 ரூபா செலுத்தும்படி எதிர் மனுதாருக்கு உத்தரவிட்டார். (க-7)

## நூற்றி ஒன்று பதினெட்டு

கோலாலம்பூரிலுள்ள ஹசன் ஈன்ஜோஸா என்பவருக்கு இப்போது நூற்றி ஒரு வயதாகின்றது. இது கால பரியந்தம் அவர் பிரமச்சாரியாகவே வாழ்ந்து வந்தார். அவருடைய உறவினர்கள் அவருக்குப் பல தடவைகள் திருமணம் செய்து வைக்க முயன்றும் பிடிவாதமாக மறுத்து விட்டார். இம் மாச ஆரம்பத்தில் சுபைதா என்ற பெண்ணின் படத்தை அவருக்குக் காட்டினார்கள் உறவினர்கள். சுபைதா அழகிதான் என்று ஒத்துக் கொண்ட ஹசன் அவளைத் திருமணம் செய்து விட்டார். பெண்ணின் குடும்பத்தாருக்கு இருபது பவுணை இனாமாக வழங்கிய ஹசன் திருமணச் செலவிற்கும் முப்பது பவுணைக் கொடுத்துள்ளார். ஆனால் சுபைதாவுக்கு இப்போது வயது பதினெட்டுத்தான். நூற்றியொன்றும் பதினெட்டும் பொருத்தமற்ற வயதாயிருந்தாலும் "நீடு வாழ்வீராக!" என்று மணமக்களை வாழ்த்தி வைப்போமாக. நெஞ்சில் நம்பிக்கை உண்டானால் வயதுப் பொருத்தம் தேவையில்லைப் போலும்!

தந்தி

## தலைமன்னார் தடுப்புமுகாமில் 14 இந்திய மீனவர்கள்

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட பதினான்கு இந்திய மீனவர்கள் தலைமன்னார் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் சம்பந்தமான விசாரணைகள் முடிவடைந்துள்ளதாகவும், இந்தியத் தூதரக அதிகாரிகளின் அனுமதி கிடைத்ததும் இவர்கள் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்றும் மன்னார் உதவி பொலீஸ் சுப்பிரிண்டன் திரு. எஸ். கந்தையா தந்தி நிருபரிடம் கூறினார்.

இந்தப் பதினான்கு மீனவர்களும், ராமேஸ்வரம் கரையிலிருந்து மீன் பிடிக்க வள்ளங்களில் புறப்பட்டு மீன் பிடித்துக் கொண்டிருக்கும்வேளையில், தவறுதலாக இலங்கைக் கடல் எல்லைக்குள் வந்து விட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல், கடலில் இயந்திரப் படகில் ரோந்து சுற்றிய இராணுவ வீரர்கள், அந்த மீனவர்களை தலைமன்னார் கரையிலிருந்து சுமார் ஒன்றரை மைல் எல்லைக்குள் சந்தேகத்தின் பேரில் கைது செய்து பொலீஸாரிடம் ஒப்படைத்தனர். (க)

## கசாப்புக் கடையினுள் கள்ளச் சாராயமா?

கசாப்புக் கடையில் கள்ளச் சாராயம் வியாபாரமாம். மடுவில் நடைபெற்று வந்ததாகக் கூறப்படும் இந்த வியாபாரத்தை யிட்டு சந்தேகம் கொள்ளும் பொலீஸார், கசிப்பு வியாபாரத்தைத் திறம்பட நடாத்த இது ஒரு புதிய யுக்தியாகக் கையாளப் படுவதாகக் கூறுகின்றனர்.

மடுமாதா ஆவணித் திருநாளை யொட்டி விசேட கடமையில் ஈடுபட்டிருந்த பொலீஸ் கோஷ்டி ஒன்று, தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து கசாப்புக் கடை ஒன்றை சோதனையிட்டதாம். அங்கிருந்து இருபத்தி எட்டு போத்தல் கசிப்பைக் கைப்பற்றிய பொலீஸார் ஒரு இளைஞரை கைது செய்தனர்.

பொலீஸ் விசாரணையின் போது தாம் தமது சொந்தப் பாவனைக்கே மது வைத்திருந்ததாகவும், வியாபாரத்துக்கல்ல என்றும் கடையில் உள்ளவர்கள் கூறினாராம்.

நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட அந்த இளைஞர் கசிப்பு வைத்திருந்த குற்றத்தை ஏற்றுக் கொள்ளவே, மன்னார் நீதவான் திரு. எம். பி. ஜீ. திசநாயக்க ரூ.250 அபராதம் விதித்து கசிப்பு முழுவதையும் அழித்துவிடும்படி உத்தரவிட்டார்.

குற்றவாளி உடனடியாக அபராதம் செலுத்தி நீதிமன்றத்தில் இருந்து வெளியேறினர். (க-185)

## சிட்னியில் இந்திய கஞ்சாவுடன் ஒரு இளைஞர் பிடிபாடு

கான்பெரா, ஆக. 19

இந்தியாவில் இருந்து சிட்னிக்கு வந்த 23 வயது ஆஸ்திரேலியரிடமிருந்து 18 ரூத்தல் கஞ்சாவை சுங்க அதிகாரிகள் கைப்பற்றினார்கள்.

1,51,200 ரூபா மதிப்புள்ள கஞ்சா அந்த நபரின் பெட்டியில் ஒளித்து வைக்கப்பட்டிருந்ததாக சுங்க மந்திரி கூறினார்.

சிட்னியில் உள்ள ஒரு கடத்தல் கோஷ்டிக்குப் பணியாளாக அந்தப் பிரயாணி செயல்பட்டதாகக் கூறப்படுகிறது. (க)

## கிணற்றில் விழுந்து சிறுமி மரணம்

புத்தம்பிட்டிய எனும் இடத்தைச் சேர்ந்த சுமார் பதினொரு வயதையுடைய சின்னஞ்சிறுமி ஒருத்தி தண்ணீர் எடுக்கச் சென்ற பொழுது கிணற்றில் விழுந்து மரணமானாள்.

தண்ணீர் எடுக்கச் சென்ற சிறுமி வராததன் காரணமாக அங்குள்ளவர்கள் கிணற்றுக்குச் சென்று கிணற்றினுள்ளே பார்த்த பொழுது கிணறு கலங்கி இருக்கக் கண்டு சந்தேகத்தின் பேரில் ஒரு கம்புத்தடியை கிணற்றில் போட்டு துழாவிப் பார்த்தனர். அப்பொழுது சிறுமியின் உடை தட்டுப்பட்டு வந்ததைக் கண்டு சிறுமியின் பிரேதத்தை வெளியில் எடுத்ததாகக் கூறப்படுகிறது. (க-202)

## டைனமைட் வைத்திருந்தார்

டைனமைட் வெடி வைத்திருந்த குற்றத்தை ஒப்புக் கொண்ட த. நடராசா என்பவருக்கு திருகோணமலை நீதவான் திரு. விக்ரமசேகரா 500 ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

அபராதப் பணத்தைச் செலுத்த செப்டம்பர் 5-ம் திகதி வரை எதிரிக்கு தவணை வழங்கப்பட்டுள்ளது. (க-287)


## தந்தி சிறு விளம்பரங்கள்

### மருந்து

மதன சஞ்சீவி லேகியம். (ஆண்களுக்கு மட்டும்) பாலிய சேஷ்டையினாலோ, அல்லது அதிக சம்போகத்தினாலோ, வீரியம், ஆண்மை குறைந்தவர்களுக்கும் (SEXUAL DEBILITY) சக்தியை இழந்தவர்களுக்கும் இழந்துபோன சக்தியைமீட்டு, புதிய சக்திக்கும் திரேக வளர்ச்சிக்கும், குடும்ப வாழ்க்கைக்கும் சிறந்த லேகியம், ஒரே புட்டியில் குணம் காணலாம். மதன சஞ்சீவி. ஒரு ரூத்தல் ரூ. 23/-. ½ ரூத்தல் ரூ. 12/- வி. பி பி. ஆடர் கவனிக்கப்படும். முருகானந்தா வைத்திய சாலை, 104, செட்டியார் தெரு, கொழும்பு - 11.

### வைத்தியம்

எவ்வளவு நாள்பட்ட வியாதியானாலும் சரி, பிற வைத்தியங்கள் செய்து குணப்படாமல் கைவிடப் பட்டதானாலும் சரி, ஊசி ஏற்றி குணப்படாமல் இருந்தாலும் சரி, (ஆண்-பெண் இரகசிய நோய்கள்) இனி காலதாமதம் செய்யாமல் நேரில் கண்டு ஆலோசியுங்கள். நேரில் வரமுடியாது போனால் கடிதம் மூலம் தொடர்பு கொள்ளுங்கள். ஆலோசனை இலவசம். முருகானந்தா வைத்தியசாலை, 104, செட்டியார் தெரு, கொழும்பு.

விளம்பரமின்றி விற்பனை இல்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 44 வயதான பின்னரும் கூட

# பெண்களால் அவருக்கு பெரும் பிரச்சினைதான்

### பத்தொன்பது வயது முதல் பலமுறை சிறை வாசம்

லண்டன், ஆக. 19

நாற்பத்து நான்கு வயதுடைய ரொபர்ட் பிளக்ஷாவின் வாழ்க்கையின் வீழ்ச்சிக்கு பெண்களே காரணகர்த்தர்களாக விளங்கி வந்திருக்கிறார்கள். அவரது 19-வது வயது முதல் 44 வயது முடிவதற்குள் 35 வருடங்கள் சிறைவாசம் அனுபவித்துள்ளார். இந்தப் பிரச்சினைகள் எழுவதற்குக் காரணமே பெண்கள்தான்.

அவர் அன்புடன் காதலித்த பெண்களைக் கொடூரமாகத் தாக்கிய குற்றத்துக்காகவே அவர் பலமுறை சிறைத் தண்டனை அனுபவித்திருக்கிறார்.

1952-ம் ஆண்டு தனது மனைவியை இவர் கொலை செய்ய முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் தொடரப்பட்ட வழக்கு விசாரணையின் முடிவில், அவருக்கு சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. அந்த முடிவின்படி பத்து ஆண்டுகளை அவர் சிறையில் கழித்தார்.

1962-ம் ஆண்டு தனது சினேகிதி ஒருத்தியைத் தாக்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டார். அதற்கும் சிறைத் தண்டனையே கிடைத்தது. ஐந்து ஆண்டுகளின் பின்னர் தன்னோடு வசித்து வந்த ஒரு பெண்மணியின் மகளைத் தாக்கிய குற்றத்திற்காக சிறைவாசம் அனுபவித்தார்.

கடந்த வாரம் பிளக்ஷாவுக்கு ஏழு ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. அவருடன் வாழ்ந்து வந்த திருமதி எலிஸபெத் முல்ஹோலண்ட் என்ற பெண், அவரை விட்டுப் பிரிந்து செல்ல முயன்ற பொழுது, அந்தப் பெண்ணின் புஜத்தில் கத்தியால் குத்திக் காயம் விளைவித்தார் என்று குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கின் முடிவிலேயே அவருக்கு ஏழு ஆண்டுகள் சிறைத் தண்டனை அளிக்கப்பட்டது.

மான்செஸ்டர் கிரவுன் கோர்ட்டில் நடைபெற்ற இந்த வழக்கு விசாரணையின் போது, நீதிபதி வில்லியம் மோரிஸ் பின் வருமாறு பிளக்ஷாவை நோக்கி குறிப்பிட்டார்:-

"பலாத்காரம் பிரயோகிப்பதில் நீர் ஒரு பெரும் சாதனையை நிலைநாட்டி இருக்கிறீர். நீர் எந்தப் பெண்ணுடன் தொடர்பு வைத்திருந்தாலும் அந்தப் பெண் உம்மை விட்டுப் பிரிய முயலும் போது பலத்த தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறாள்." (க)

### லொறி விபத்து

மாவனல்லை ஹெம்மாதகமை பாதையில் கடுகஹவத்த எனும் இடத்தில் திருத்தி அமைக்கப்படும் சிறிய பாலத்தில் சென்ற இரு லொறிகள் பாலத்தையும் உடைத்துக் கொண்டு மோதுண்ட சம்பவம் ஒன்று இங்கு நிகழ்ந்துள்ளது.

அரிசி ஏற்றிக் கொண்டு ஹெம்மாதகமையை நோக்கிச் சென்ற ஒரு லொறியும், மரக்கட்டைகளை ஏற்றிக் கொண்டு மாவனல்லையை நோக்கி வந்து கொண்டிருந்த ஒரு லொறியும் இந்த விபத்துக்குள்ளாகின. (க-202)

### நடுத்தெருவில் உல்லாச பயணிகளின் காதல் லீலை

பிளாரென்ஸ் (இத்தாலி) ஆக. 19

டென்மார்க்கைச் சேர்ந்த ஒரு ஜோடி இங்கு நடுத்தெருவிலேயே படுக்கை அறை லீலைகளை நடத்திப் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

சுற்றுப் பயணிகளான ஆணும், பெண்ணுமான இருவர் இரவில் டாக்சியில் சென்று பிளாரென்ஸ் நகரின் புறநகர்ப் பகுதித் தெரு ஒன்றில் இறங்கினர். சற்றும் தயங்காமல் தங்கள் ஆடைகள் அனைத்தையும் அவிழ்த்து வைத்தார்கள்.

பிறகு நடுத்தர வயதுடைய அவர்கள் அவ்வழியாகச் சென்றவர்களுக்கு திகைப்பூட்டும் வண்ணம் சாலையோரத்து நடைபாதையிலேயே படுத்து உடல் உறவு கொண்டனர்.

அதைக் காணச் சகியாத மாது ஒருவர் தன் வீட்டு ஜன்னலிலிருந்து தலையை வெளியே நீட்டி ஒரு வாளி குளிர்ந்த தண்ணீரை அந்த ஜோடியின் மீது அபிஷேகம் செய்தார். அந்த ஜோடி எதிர்பக்கத்து நடைபாதைக்குச் சென்று தங்கள் லீலையைத் தொடர்ந்தது. அந்தப் பக்கத்து ஜன்னல் ஒன்றிலிருந்தும் அவர்கள் மீது ஒரு வாளித் தண்ணீர் அபிஷேகம் செய்யப்பட்டது. அந்த ஜோடி அப்போதும் சலிப்படையாமல் எழுந்து சாலையின் நடுப் பகுதிக்குப் போய் படுத்து லீலையைத் தொடர்ந்தது.

இதற்குள் வேடிக்கை பார்க்க 20 பேர் கூடிவிட்டனர். ஆனால் அந்த ஜோடியின் மோகம் குறையவில்லை.

கடைசியாக ஒரு மாது பொலீசுக்கு டெலிபோன் செய்யவே பொலீஸார் வந்து அவர்களை ஆடைகளை மாட்டிக் கொள்ளுமாறு செய்து விசாரணைக்காகப் பொலீஸ் நிலையத்திற்குக் கூட்டிச் சென்றனர். (க)

### கந்தளாய் கொலை முயற்சி வழக்கில் எதிரி விடுதலை

திருகோணமலை, ஆக. 19

காயமடைந்தவர் முன்னுக்குப் பின் முரணாக சாட்சியம் அளித்தவே, திருமலை நீதவான் திரு. விக்ரமசேகரா கந்தளாய் கொலை முயற்சி வழக்கில் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

காயமடைந்த நபரான சாதிரிஸ் அப்பு சாட்சியமளிக்கையில், "சம்பவ தினம் எதிரி வீதியால் வந்து கொண்டு இருக்கையில் என்னைச் சந்தித்தார். வயல் விடயமாக இருவருக்கும் தகராறு எழும்பியது. இதில் எதிரியும் நானும் கைகலந்தோம். அப்பொழுது எதிரியின் கைகளில் இருந்த துப்பாக்கி தற்செயலாக வெடித்தது. எதிரி துவக்கினால் எனக்கு இலக்கு வைத்துச் சுடவில்லை" என்றார்.

இக்கட்டத்தில் நீதவான் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் சம்பந்தர் ஆஜரானார். (க-287)

### சிபார்சுக் கடிதங்கள் போலியானவையாம்

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தில் மீண்டும் வேலை பெறுவதற்கு ஊழியர்களால் சமர்ப்பிக்கப்பட்ட சில சிபார்சுகளும் சான்றிதழ்களும் போலியானவை என்பதை ஸ்தாபனத்தின் தலைவர் திரு. ஆர். ஒபேசேகரா கண்டு பிடித்துள்ளார்.

மீண்டும் வேலை பெறுவதற்கு இருக்கும் 800 ஊழியர்களும் சமர்ப்பித்துள்ள சிபார்சுகளை முற்றாகப் பரிசீலனை செய்யும்படி இப்போது திரு. ஒபேசேகரா உத்தரவிட்டுள்ளார்.

சிலர் சமர்ப்பித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிபார்சுக் கடிதங்கள் போலியானவை என்பது இதுவரை நடைபெற்ற பரிசீலனையில் தெரிய வந்துள்ளது. (க)

### "எனது வயலுக்குள் அவர் அத்துமீறிப் புகுந்தார்"

திருகோணமலை, ஆக. 19

தான் செய்கை பண்ணி வந்த வயலுக்குள் அத்துமீறிப் புகுந்ததாக அந்த வயலின் உரிமையாளர் எஸ். மயில்வாகனம் என்பவர் மேல் பேச்சிமுத்து பொன்னம்பலம் என்பவர் தொடர்ந்த வழக்கு திருமலை நீதவான் திரு. டி. சி. டபிள்யூ. விக்ரமசேகர முன்னிலையில் அண்மையில் விசாரணைக்கு வந்தது.

முறைப்பாட்டுக்காரரான பே. பொன்னம்பலம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

"கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாக நான் நரியோட்டு என்ற வயலை செய்கை பண்ணி வருகிறேன். நான் இக் காணியின் பரம்பரைச் சொந்தக்காரன். சம்பவ தினம் எதிரி இவ்வயலை செய்கை பண்ணினார்" என்றார்.

எதிரி சாட்சியம் அளிக்கையில், கூறியதாவது:-

"இவ் வயலின் சொந்தக்காரன் நான்தான். 1967, 68-ம் ஆண்டுகளில் நானே இவ்வயலில் நெற்செய்கை செய்தேன். சம்பவ தினம் நான் இவ்வயலில் அறுவடையை ஆரம்பித்தேன். முறைப்பாட்டுக்காரர் செய்த வேளாண்மையை நான் அறுவடை செய்யவில்லை."

இவ் வழக்கின் தீர்ப்பு ஆகஸ்ட் 30-ல் வழங்கப்படும்.

எதிரிதரப்பில் வழக்கறிஞர் எம். கே. செல்லராசாவும், வாதி தரப்பில் திரு. பி. இரங்கநாதனும் ஆஜரானார்கள். (க-287)

### லங்கா சிங்க கப்பல் விற்பனை

"லங்கா சிங்க" என்ற இலங்கைக் கப்பல் விற்பனை செய்யப்பட இருக்கிறது. இந்தக் கப்பலை விற்பதற்கான தரகு வேலையை பிரித்தானிய கம்பெனி ஒன்று ஏற்று, அதற்கான சுற்றறிக்கைகளை அனுப்பியிருக்கிறது.

### பாலாவியில் மற்றொரு விபத்து

புத்தளம், பாலாவி ரயில்வேக் கடவைக்கு அண்மையில் மற்று மோர் ரயில் விபத்து. வானும், ரயிலும் மோதியதில் அறுவர் படுகாயம் அடைந்துள்ளனர்.

அண்மையில் 14 பேர்களது உயிரைப் பலி கொண்ட ரயில் – பஸ் விபத்து நடைபெற்ற பாலாவி ரயில்வேக் கடவையில் இருந்து மூன்று மைல் தொலைவிலேயே நேற்றைய விபத்து இடம் பெற்றுள்ளது.

"அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிட்டெட்" பத்திரிகை நிறுவனத்துக்குச் சொந்தமான வானே விபத்தில் சிக்குண்டதாகும்.

இந்த விபத்தினால் காயமடைந்தோர் சிலாபம், புத்தளம் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க)


## மணிப்புரி சாரிகள்



"மணிப்புரி" சாதியைச் சேர்ந்த மிக விலை உயர்ந்த சாரிகளைக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள முடியும். அழகான கண்கவர் சித்திர வேலைகளைக் கொண்ட இச்சாரிகள் நீங்கள் விரும்பும் எல்லா வர்ணங்களிலும் பெற்றுக் கொள்ள முடியும். கைதேர்ந்த சித்ரக் கலைஞர்களாலும், வல்லுநர்களாலும் இந்திய கலாபவனத்தில் நடாத்தப்பெற்ற சித்திரக் கண்காட்சியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மனங்கவரும் சித்திர வேலைப்பாடுகளே இச் சாரிகளில் பொருந்தியுள்ளன.

ஒரு சாரியின் விலை ரூபா 29-50 மாத்திரமே.
ஒவ்வொரு சாரியுடனும் ஒரு சட்டைத் துணியும் கவர்ச்சியான ஒரு பிரேஸியரும் இலவசமாக அனுப்பப்படும்.
தபால் செலவு இலவசம்.

இது சாயம் மாறாது நீண்ட காலம் பாவிப்பதோடு எந்தவொரு சவர்க்காரத்திற்கும் தரம் மாறாதது. ஸ்திரிக்கை செய்ய வேண்டியதில்லை. இதன் அழகான தரமும், குன்றாத தோற்றமும் உங்கள் மேனியழகை மென்மேலும் அழகுறச் செய்கின்றது. எனவேதான் இதனைப் பிரபல நடிகைகளும் அணிகின்றார்கள்.

பாடசாலைகளுக்கும் வேண்டிய உற்சவங்களுக்கும் ஏற்ற இந்த சாரியை வாங்குவதற்கு இன்றே நீங்கள் விரும்பும் நிறத்தைக் குறிப்பிட்டு ஒரு தபாலட்டை மூலம் தெரிவிக்கவும். வி. பி. பி. VPP. மூலம் அனுப்பி வைக்கப்படும். (பிரேஸியர் அளவுகளை அனுப்புங்கள்.) தயவு செய்து உங்கள் விலாசத்தை தெளிவாக எழுதுங்கள்.

The Manager
ANESCO AGENCIES (TH)
191/1, High Level Road, Kirillapone Colombo 6.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவில் இருந்து

# பீடி இலை இறக்குமதியில் பெரும் மோசடியாம்!

பெருந்தொகை அந்நிய செலாவணி மோசடி ஒன்றில், பலர் திட்டமிட்டு ஈடுபட்டு உள்ளதாக அரசாங்கம் கண்டு பிடித்து இருக்கிறது. அந்நிய செலாவணியை இந்தியாவில் சேமித்து வைப்பதில் இந்த பீடி உற்பத்தியாளர், அந்நிய செலாவணி பீடி உற்பத்தியாளர்கள் ஈடுபட்டுள்ளனராம்.

பீடி இலை இறக்குமதி பெர்மிட் உடையவர்கள் இலங்கையில் 3000 பேர் இருக்கின்றனர். அவர்கள் அனைவருமே உண்மையாக பீடி இலை இறக்குமதி செய்வதில்லை என்பது கைத்தொழில் அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதனை அடுத்து, கைத்தொழில் அமைச்சர் திரு. ரி. பி. சுபசிங்கா உண்மையான பீடி இலை இறக்குமதியாளர்கள் யார் யார் என்பதைக் கண்டறியுமாறு தமது அமைச்சு அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

ஆண்டு தோறும் 90 லட்சம் ரூபா பெறுமதியான பீடி இலை இறக்குமதி செய்யப்படுகிறது. இதைக் குறைப்பதற்கும், இறக்குமதியை அரசாங்கம் பொறுப்பேற்று நடத்துவதற்கும் கைத்தொழில் அமைச்சு ஆலோசித்து வருகிறது. (க)

## ஜே. வி. பி. இயக்கம் பற்றி ஐ. ஜி. பி. விளக்கினார்

சேகுவேரா இயக்கம் நாட்டின் எதிர்காலத்துக்கு மிகவும் பயங்கரமான ஒரு சவாலாக உள்ளது. இதைப் பொலீசார் உணர்கின்றனர். எனவே இந்த இயக்கம் சம்பந்தப்பட்ட பூரண தகவல்களை ஆராய்வதற்கு துப்பறியும் பொலீஸ் பிரிவு மேலும் பலப்படுத்தப்படுகிறது. எல்லா பொலீஸ் நிலையங்களும் உஷார் படுத்தப்பட்டுள்ளன.

புதிய பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. ஸ்டான்லி சேனநாயக்க பொலீஸ் தலைமைக் காரியாலயத்தில் வைத்து நேற்று முதல் தடவையாகப் பத்திரிகையாளர் மகாநாட்டை நடத்திய போது மேற்கண்ட தகவல்களை வெளியிட்டார்.

பத்திரிகையாளர் கேட்ட கேள்விகளுக்கு அவர் பதிலளிக்கையில் கூறியதாவது:-

ஜனதா விமுக்தி பெரமுனை என்றும் சேகுவேரா இயக்கம் என்றும் அழைக்கப்படுவது ஒரே இயக்கம் என்றுதான் பொலீசாருக்கு கிடைத்த தகவல்களில் இருந்து தெரிய வருகின்றது.

"இந்த இயக்கத்தில் பல உப பிரிவுகள் உள்ளன என்றும் தெரிய வருகின்றது. தற்போது அதன் தலைவர் திரு. விஜயவீரா என்று சொல்லப்படுகிறது. இவர்களது காரியாலயத்தைக் கண்டு பிடித்தால்தான் இவர்கள் சம்பந்தப்பட்ட தகவல்களை விவரமாக அறிந்து கொள்ளலாம்.

"இந்த இயக்கத்தினருக்குப் பணம் எங்கிருந்து கிடைக்கின்றது? இவர்களுக்கும் அமெரிக்க உளவு ஸ்தாபனங்களுக்கும் ஏதாவது தொடர்பு உண்டா? அந்தக் கேள்விகளுக்கு இன்னும் விடை காணப்படவில்லை.

"ஜனதா விமுக்தி பெரமுனையைச் சேர்ந்த நபர்கள் இலங்கையின் முப்படைகளுக்கும் படிப்படியாக ஊடுருவுவதாக கூறப்படுகின்றது. இது சம்பந்தமாகப் பொலீசார் மிகவும் உஷாராக இருந்து வருகின்றனர்.

"இன்று எம்மிடம் 11500 பொலீசார்தான் உள்ளனர். நாட்டின் பாதுகாப்பு வேலைகளுக்கு தற்போது உள்ள பொலீஸ் பலம் போதாது. சேகுவேரா இயக்கம் போன்றவற்றைக் கவனிக்க பொலீஸ் படையின் பலம் 15000 ஆக உயர்த்தப்பட வேண்டும்.

"சேகுவேரா இயக்கம் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இன்னும் பரவவில்லை.

"இவர்கள் நடாத்தும் போதனை வகுப்புக்கள் சம்பந்தமாக எமக்குக் கிடைத்த தகவலின்படி இவர்கள் தற்போது வழமையில் உள்ள ஜனநாயக ஆட்சிக்கும், ஜனநாயக பாரம்பரியத்துக்கும் முரணானவை என்பது தெளிவாகியுள்ளது.

"இவர்கள் புரட்சி மூலம் புதிய அரசியல் அமைப்பை உருவாக்கத் திட்டமிட்டுள்ளதாக அறிகின்றோம்.

"இந்த இயக்கத்தில் 18 வயது முதல் 25 வயது வரை உள்ளவர்கள் சேர்ந்துள்ளனர் என்று தெரிகிறது"— இப்படி பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் சொன்னார். (க)

## டட்லியும் செல்வாவும் வழிமுறைக் குழுவில்

அரசமைப்பு நிர்ணய சபையின் வழிமுறைக் குழுவுக்கு ஐ. தே. கட்சியின் தலைவர் திரு. டட்லி சேனநாயக்காவும், தமிழரசுத் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகமும் நியமிக்கப்பட்டனர்.

அரசமைப்பு நிர்ணய சபைக் கூட்டம் நேற்று பிற்பகல் 2 மணிக்கு அதன் தலைவர் திரு. ஸ்டான்லி திலகரத்ன தலைமையில் கூடியது.

திருவாளர்கள் டட்லி சேனநாயக்கா, எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஆகியோர் வழிமுறைக் குழுவுக்கு நியமிக்கப்பட்டுள்ளதாக தலைவர் அறிவித்தார்.

இதன் பின்னர் அரசமைப்பு விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா அரசமைப்பு சபையின் நிரந்தர விதிகளில் 17-ம், 26-ம் பிரிவுகளுக்குத் திருத்தங்களைக் கொண்டு வந்தார். அந்தத் திருத்தங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

சபை செப்டம்பர் மாதம் 24-ம் திகதி பி. ப. 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

திருத்தப்பட்ட 28-வது நிரந்தர விதியின்படி அரசமைப்பு சபை ஒவ்வொரு மாதமும் மூன்றுவது வாரத்தில் போயாவுக்குப் பின் 2-ம், 3-ம், 4-ம், 5-ம் நாட்களிலும், நான்காவது வாரத்தில் போயாவுக்குப் பின் 2-ம், 3-ம் நாட்களிலும் கூடும். (க)

## ராஜினமா

இலங்கை வங்கியின் தலைவர் திரு. எம். எப். டி. எஸ். ஜயரத்தின தனது ராஜினமா கடிதத்தை நேற்று நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேராவிடம் சமர்ப்பித்தார். (க)

## 'பிறர் மனைவி அருகில் அமர்ந்து பாட்டுப் பாடினார் என் கணவர்'

"தெல்தெனியாவில் உள்ள சினிமாத் தியேட்டர் ஒன்றில் சிங்களப் படமொன்றைப் பார்ப்பதற்காக நான் சென்றிருந்தேன். வழக்கத்திற்கு மாறாக எனது கணவர் கூடிய மது போதையில் அன்று படத்திற்கு வந்திருந்தார். அங்கு வந்திருந்த பிறிதொருவரின் மனைவியின் அருகே அமர்ந்து அவர் பாடிக் கொண்டிருந்தார். சிறிது நேரத்தின் பின் அப் பெண்ணின் கணவனும், வேறு சிலரும் எனது கணவரை "பல்கனி"யில் இருந்து இழுத்து வந்து தியேட்டரின் வெளியில் தள்ளி விட்டார்கள்."

தெல்தெனியா "சேர்க்கியூட்" மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் கண்டி மேலதிக நீதவான் திரு. ஜி. மதநாயக்கா முன்னிலையில் எடுக்கப்பட்ட ஒரு வழக்கில் சாட்சியமளித்த எதிர்மனுதாரரான ருேகினி தேவி வீரசேகரா, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தாயுடன் வசிக்கும் தனது குழந்தைகளான குமுதினி குமாரி (6), பத்மினி குமாரி (4) ஆகிய இருவரையும் தன்னுடன் செல்ல அனுமதிக்கும்படி கோரி எதிர் மனுதாரரின் கணவரான ஜோதிரத்தின பண்டார வீரசேகரா என்பவர் இவ் வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

எதிர் மனுதார் தொடர்ந்து சாட்சியம் அளிக்கையில் தெரிவித்ததாவது:—

"1969-ம் ஆண்டு ஜூன் மாதம் 6-ம் திகதி அன்று என்னுடன் என் சகோதரி, பெற்றோர், அத்தான் ஆகியோர் எனது வீட்டில் இருந்தனர். அவ்வேளையில் மது போதையுடன் வீடு திரும்பிய எனது கணவர் எனது பெற்றோரைத் தகாத வார்த்தைகளால் தூற்றியதுடன், அவர்களைக் குத்துவதற்கு கிரிஸ் கத்தி ஒன்றையும் எடுத்து வந்தார்.

"உடனே எனது பெற்றோர் காரில் வீட்டை விட்டு வெளியேறினர். அவர்களுடன் என்னையும் வெளியேறும்படி கணவர் உத்தரவிட்டார். அன்று அவரை விட்டுப் பிரிந்து சென்ற நான் இன்று வரை பெற்றோருடனே தான் வசித்து வருகிறேன்.

"எனக்கு எனது சுற்றத்தாரின் ஆதரவு இருப்பதால் என் பிள்ளைகளை எதுவித குறையுமின்றிக் கவனிக்க முடியும்."

நீதவான்:— "உமக்கு சுற்றத்தவரின் உதவி கிடைக்காவிட்டால், எவ்வாறு பிள்ளைகளைக் கவனிப்பீர்?"

சாட்சி:— "எனது பெயரில் உள்ள சொத்துக்களின் உதவியினால் எனக்கு மாதம் 440 ரூபா வரையில் வருமானம் உண்டு. எனக்கு இன்னும் சொத்துக்கள் வந்து சேரவுள்ளன.

"1969-ம் ஆண்டு ஜனவரி 1-ம் திகதியன்று பிற்பகல் ஆறு மணிக் காட்சிக்கு நாங்கள் தியேட்டருக்குச் சென்றிருந்தோம். அப்போது தான் நான் முன்னர் குறிப்பிட்ட சம்பவம் இடம் பெற்றது."

மனுதாரின் வழக்கறிஞர்:— "உமது கணவர் மிகவும் மரியாதை உள்ள ஒருவர் அல்லவா?"

சாட்சி:— "அவர் குடிப்பழக்கத்தை விட்டால் ஒரு நல்ல மனிதர் தான்."

வழக்கறிஞர்:— 1961-ம் ஆண்டு நடைபெற்ற உங்கள் திருமணத்தின் பின்னர் கணவருடன் வெல்லவா என்ற இடத்தில் வசித்து வந்தீர்?"

சாட்சி:— "ஆம்".

வழக்கறிஞர்:— "நாலாவது குழந்தை பிறந்த பின்னர் "மல்தெதற" என்ற இடத்தில் வசித்தீர்கள். அப்போது அவர் உம்மை குறையின்றிக் கவனித்தார் அல்லவா?"

சாட்சி: "இல்லை".

வழக்கறிஞர்: "அவ் வேளையில் உமக்கு தோல் வியாதி ஏற்பட்டதனால், உமது கணவர் உம்மை கொழும்புக்குக் கொண்டு சென்று வைத்திய நிபுணர்களிடம் காட்டி வைத்தியம் செய்தார் அல்லவா?"

சாட்சி:— "ஆம், எனது பெற்றோரின் செலவில்."

வழக்கறிஞர்:— உமது கணவர் எல்லோராலும் மதிக்கப்படுபவர், அத்துடன் உயர் பதவி வகிப்பவர். அதனால் அப் பகுதியில் உள்ள பெரிய மனிதர்களுடன் சகவாசம் கொண்டவர் அப்படித் தானே?"

சாட்சி:— "ஆம். அவர் பெரிய மனிதர்களுடன் தான் சகவாசம் கொண்டவர். அவர்களுடன் தான் சேர்ந்து குடிப்பார். அவரது மரியாதையை விடப் பெரியது அவரது மது போதை."

இந் நிலையில் விசாரணை பின் போடப்பட்டது. (க-7)

## சாராயம் வைத்திருந்த பெண் நூறு ரூபா அபராதம் கட்டினார்

சட்டவிரோதமாக சாராயம் வைத்திருந்த பெண்ணுக்கு ரூ. 100 அபராதம் விதித்தார் மல்லாகம் நீதிபதி.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சின்னி என்ற பெண் சட்ட விரோதமாக சாராயம் வைத்திருந்ததாகக் குற்றம் சாட்டி சங்கானைப் பொலீஸார் மல்லாகம் நீதிமன்றத்தில் ஒரு வழக்கைத் தாக்கல் செய்திருந்தனர்.

இவ் வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. எஸ். ஆனந்தக் குமாரசாமி முன்னிலையில் விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்ட போது எதிரியைக் குற்றவாளியாகக் கண்ட நீதிபதி எதிரிக்கு ரூபா 100 அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

சங்கானையைச் சேர்ந்த சின்னத்தம்பி ராமலிங்கம் என்பவர் சட்ட விரோதமாக சாராயம் வைத்திருந்ததாகக் குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கிலும் எதிரியைக் குற்றவாளியாகக் கண்ட நீதிபதி எதிரிக்கு ரூபா 100 அபராதம் விதித்தார். (க-290)

## அரசாங்கம் பாண் தயாரிக்கும்

அரசாங்க பாடசாலைகளில் மதிய போஜனமாக மாணவர்களுக்கு வழங்கப்படும் பணிஸ் வகைகளை தயாரிக்கும் வேலையை வெகு விரைவில் அரசாங்கம் பொறுப்பேற்கும்.

மாணவர்கள் நலன் கருதி அரசாங்கம் சொந்தத்தில் பேக்கரிகளை நடத்த வேண்டும் என்ற ஒரு திட்டத்தை கல்வி அமைச்சர் டாக்டர் பதியுதீன் மஹ்மூத் தயாரித்துள்ளார்.

## விடுதலை

சாட்சியம் முரண்பாடு காரணமாக ஒளித்து இருந்து தாக்கியதான வழக்கில், திருமலை நீதவான், திரு. விக்ரமசேகரா எதிரியான முகம்மது அலி என்பவரை விடுதலை செய்து தீர்ப்பளித்தார். (க-287)

இப் பத்திரிகையை அச்சிட்டவர் சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேனமாவத்தை, கொழும்பு - 12 (இலங்கை). வெளியிட்ட திகதி 20 ஆகஸ்ட் 1970
Thanthi 5, Gunasena Mawatha, Colombo 12 (Ceylon).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org